**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110241

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/2020/AC/CB Date: நாள் 20.02.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19.02.2020 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.30hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.02.2020 Time : நேரம் 15.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.02.2020 Time : நேரம் 15.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South about 50 km
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o Executive Engineer, UEDC, TANGEDCO, Pollachi, Coimbatore
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Amarnath (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Krishnasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1989/2020 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Senior Engineer (g) Address : முகவரி Door No. 1/107, Gnanapathipalayam Post, Udumalaipettai Taluk, Tiruppur District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Augastin Christopher, Assistant Accounts, O/o Executive Engineer, UEDC, TANGEDCO, Pollachi, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .......................... Rank .......................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Vth 20/8/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station 20.08.2020
காவல் நிலையப் பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.08.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police
VBAC, Coimbatore

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2020/AC/CB, u/s.7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

20.08.2020ம் தேதி வியாழக்கிழமை மாலை 15.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது K.அமர்நாத், வயது-31, த/பெ.கிருஷ்ணசாமி, கதவு எண்.1/107 கணபதிபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை தாலுகா, திருப்பூர் மாவட்டம் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரிடம் திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர், கணக்கு உதவியாளர் விவசாய மின் இணைப்பை புகார்தாரர் பெயரில் மாற்றம் செய்வதற்காக லஞ்சமாக பணம் கேட்டது தெரிய வந்தது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 20.08.2020ம் தேதி மாலை 17.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 3/2020/AC/CB, u/s.7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K.அமர்நாத், வயது-31, த/பெ.கிருஷ்ணசாமி, கதவு எண்.1/107 கணபதிபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை தாலுகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, கணபதிபாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெங்களூரில் Harman International India Private Limited I.T கம்பெனியில் Senior Engineer ஆக பணிபுரிந்து வருகிறேன். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பண்ணைகிணர் கிராமம் சர்வே எண்.267/2ல் 4 ஏக்கர் விவசாய நிலத்தை கோமங்கலத்தைச் சேர்ந்த சௌந்திரராஜன் என்பவரது மகன் விஜயசேகர் என்பவரிடமிருந்து 24.06.2020ம் தேதி கிரையம் வாங்கினேன். நான் வாங்கிய விவசாய நிலத்தில் உள்ள மின்சார இணைப்பு எண்.344002327 விஜயசேகர் பெயரில் இருந்தது. அந்த மின்சார இணைப்பை எனது பெயரில் மாற்றம் செய்வதற்காக கொங்கல்நகரத்தில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய செக்சன் அலுவலகத்திற்கு 12.08.2020ம் தேதி காலை சுமார்

[redacted]

10.00 மணிக்கு சென்று திரு.சமுத்திரம் AE அவர்களை பார்த்து விவசாய மின் இணைப்பை எனது பெயரில் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்துடன் அந்த நிலத்தின் சிட்டா, அடங்கல், வரைபடம், போட்டோ-2, Indemnity Bond, கிரைய பத்திரத்தையும் இணைத்து கொடுத்தேன். அவர் என்னிடம் விண்ணப்பத்தை வாங்கி பார்த்து விட்டு எனது செல்போன் நம்பர் 9976770422 கேட்டு எனது விண்ணப்பத்தில் பென்சிலால் எழுதினார். அவர் என்னிடம் இரண்டு நாட்களில் பீல்டுக்கு இன்ஸ்பெக்சன் வருவதாக சொன்னார். அதன்பின்னர் நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். 14.08.2020 தேதி மாலை சுமார் 4 மணிக்கு திரு.சமுத்திரம் AE அவர்களை எனது பீல்டுக்கு வந்து பார்த்தார். அப்போது அவர் என்னிடம் திங்கட்கிழமை ஆபீசுக்கு வந்து பாருங்கள் பைலை ரெடி பண்ணி வைக்க சொல்கிறேன். நான் சரி என்று சொன்னேன். நான் 17.08.2020ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு கொங்கல்நகரம் AE அலுவலகம் சென்று திரு.சமுத்திரம் AE அவர்களை பார்த்தேன். அந்த அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலரிடம் எனது பைலை ரெடி செய்து கொடுக்க சொன்னார். அந்த பெண் அலுவலர் நான் ஏற்கெனவே கொடுத்த விண்ணப்பத்துடன் அந்த அலுவலகத்தில் தயார் செய்து வைத்திருந்த பைலையும் சேர்த்து என்னிடம் கொடுத்து பொள்ளாச்சியில் உள்ள TANGEDCO செயற்பொறியாளர் அலுவலகத்தில் கொடுக்க சொன்னார். நான் அப்போது அந்த பெண் அலுவலரிடம் EE அலுவலகத்தில் யாரிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அவர் முதல் மாடியில் தர்மராஜ் என்பவரை பார்த்து கொடுக்க சொன்னார். அதன்பின்னர் சுமார் 11.30 மணியளவில் பொள்ளாச்சி EE அலுவலகம் சென்று திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர், Assistant Accounts என்பவரிடம் AE அலுவலகத்தில் கொடுத்த பைலை கொடுத்தேன். அவர் அந்த பைலை புரட்டி பார்த்து சரியாக உள்ளதா என்று கம்யூட்டரில் சரிபார்த்த பின்னர் அந்த பைலை என்னிடம் திருப்பி கொடுத்து தர்மராஜ் என்பவரிடம் கையெழுத்து வாங்கி வர சொன்னார். நான் அவர் சொன்ன தர்மராஜ் அவர்களிடம் கையெழுத்து வாங்கி மீண்டும் பைலை அவரிடம் கொடுத்தேன். திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் எனது பைலை பார்த்துவிட்டு அவர் எனது செல்போன் எண்ணை கேட்டார். நான் அவரிடம் விண்ணப்பத்தில் எனது செல்போன் எண்ணை கொங்கல்நகர் செக்சன் AE சார் எழுதிய விபரத்தை சொன்னேன். அவர் வருகிற புதன்கிழமைக்குள் கூப்பிடுவதாகவும், Demand Notice வாங்கும் போது கவனிக்கனும் என்று சொன்னார். நான் அவரிடம் அவரது செல்போன் எண்ணை கேட்ட போது அவர் அவரது போன் not reachable area-வில் இருக்கும் என்றும் அவரே கூப்பிடுவதாகவும் சொன்னார். 19.08.2020-ம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் அவரது செல்போன் எண் 8838422470 லிருந்து எனது செல்போன் எண்.9976770422க்கு அழைத்து name transfer செய்வதற்கான Demand Notice ரெடி பண்ணியிருக்கிறேன் என்றும் இன்றைக்கு அல்லது நாளைக்கு வந்து வாங்கி விடுங்கள் என்றும், பீஸ் மதியம் 2.30 மணிவரை தான் கட்ட

முடியும். அதனால் நாளைக்கு வந்து எல்லா வேலைகளையும் முடித்து விடுங்கள் என்றும் கூறினார். அதன்பின்னர் நான் மதியம் சுமார் 12.15 மணிக்கு எனது செல்போன் எண்ணிலிருந்து அவரது செல்போன் எண்ணிற்கு அழைத்து இன்றைக்கே வந்து பார்த்து விடுகிறேன், எவ்வளவு நேரம் சார் இருப்பீர்கள் என்று கேட்டேன். மதிய உணவு இடைவேளைக்கு முன்னரோ பின்னரோ வாருங்கள் என்று சொன்னார், அதனால் நான் மதியம் சுமார் 2.30 மணிக்கு பொள்ளாச்சி EE அலுவலகம் சென்று திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் எனது விண்ணபத்தை எடுத்து பார்த்துவிட்டு எனது விண்ணப்பத்தில் அவரது பென்சிலால் 3000 என எழுதி காண்பித்தார். நான் அவரிடம் அவ்வளவு எல்லாம் என்கிட்ட இல்லைங்க சார், நானே ரொம்ப கஷ்டத்தில இருக்கிறேன் சார், நா இவ்வளவு எல்லாம் எதிர்பார்கலைங்க, 500/- ரூபா வரும் என்று நினைத்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ஆபீசர்ஸ கவனிக்கனும், ரூ.320/- பீஸ் கட்டிவிட்டு இங்க வரனும், இப்ப இருக்கிறத கொடுத்துட்டு போங்க, நீங்க அத, நீங்க வர டைம் பாத்திருங்க என்றும், 1500/- ரூபாய் கொடுத்துட்டு போங்க என்றும் சொன்னார். நான் அவரிடம் பாதி சம்பளம் தான் கொடுக்கிறாங்க, அத வைச்சுக்கிட்டு வீட்டு வாடகை கொடுக்கனும், எங்க கஷ்டத்தையும் புரிஞ்சிக்கோங்க என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நீங்க இருக்கிறத கொடுத்துட்டு போங்க, நீங்க அடுத்து நான் சொன்னதை டிரை பண்ணுங்க, 320/- ரூபாய் பீஸ் கட்டிவிட்டு வாருங்கள் என்று சொன்னார். அவர் வற்புறுத்தி கேட்டதால், விருப்பமில்லாமல் நான் வேறு வழியில்லாமல் ரூ.500/- அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் அவரது டேபிள் டிராயரை திறந்து பணத்தை போட சொன்னார். நான் அவர் சொன்னபடி பணம் ரூ.500/-ஐ டேபிள் டிராயரில் வைத்தேன். அப்போது அவர் Tamilnadu Electricity Generation and Distribution Corporation Limited Demand Notice 28811 LT Agreement Charges Rs.20/-, 61964 Name Transfer fees (61909c) Rs.300/- என்று Demand Notice எங்கிட்ட கொடுத்து கொங்கல்நகரம் AE அலுவலகத்தில் பீஸ் கட்ட சொன்னார். அதன்பின்னர் நான் கிளம்பிவிட்டேன். இன்று 20.08.2020 தேதி காலை சுமார் 09.45 மணிக்கு கொங்கல்நகரம் AE அலுவலகத்தில் ரூ.320/- பீஸ் கட்ட சென்ற போது AE அவர்கள் அலுவலகத்தில் இல்லை. எனவே நான் AE அலுவலகத்தில் வைக்கபட்டிருந்த அலுவலக போர்டில் இருந்த AE அவர்களின் செல்போன் எண்.9445851540-க்கு எனது செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் வெளியில் இருப்பதாகவும், அலுவலகத்தில் பைலை கொடுத்துவிடுங்கள் பீஸ் நாளைக்கு கட்டுங்கள் என்று சொன்னார். அவர் சொன்னபடி நான் அந்த அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலரிடம் ரூ.320/- கட்டுவதற்கான சிலிப் மற்றும் LT Agreement-யும் கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டேன். திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் சொன்னதுபோல் எனது பெயரில் மாற்றம் செய்வதற்கான பீஸ் தொகையை கட்டிய பிறகு அவரிடம் கொடுக்க செல்கிறேன். எனது நிலத்தின் விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து கொடுக்க என்னிடம்

ஏற்கனவே 500/- ரூபாய் வற்புறுத்தி வாங்கிகொண்டார். மேலும் அவர் கேட்டது போல் அவருக்கு 1500/- லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது நிலத்தின் விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்காக என்னிடம் லஞ்சமாக ரூ.1500/-பணம் கேட்ட திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர், Assistant Accounts மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். நான் 19.08.2020 தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் நானும் திரு. அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்களும் பொள்ளாச்சி EE அலுவலகத்தில் வைத்து பேசிய உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்து வைத்திருந்ததை CD-யில் போட்டு தங்களிடம் ஒப்படைக்கிறேன். இடம்: கோவை நாள் 20.08.2020 இப்படிக்கு, sd/-(xxxx) 20.08.2020 (K.Amarnath). Respected Madam, Received a complaint on 20.08.2020 at 15.00 hrs sd/-(xxxx) 20.08.2020 (K.Sasilekha), Inspector of Police, V&AC, Coimbatore. Respected Madam, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No.3/2020/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 20.08.2020 at 17.00 hrs sd/-(xxxx) 20.08.2020 (K.Sasilekha), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு, வாதி ஆஜர்படுத்திய HP என்ற பெயர் பொறிக்கப்பட்ட CD-R மற்றும் 65(B),4(C) of the Indian Evidence Act 1872 ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(signature) 20.08.2020

(கி.சசிலேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.

அனுப்புநர்

K.அமர்நாத், வயது 31,
த/பெ.கிருஷ்ணசாமி,
கதவு எண் 1/107 கணபதிபாளையம் அஞ்சல்,
உடுமலைப்பேட்டை தாலுகா,
திருப்பூர் மாவட்டம்.

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,
லஞ்ச ஒழிப்பு துறை,
கோயம்புத்தூர்

அய்யா,

நான் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, கணபதிபாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெங்களூரில் Harman International India Private Limited I.T கம்பெனியில் Senior Engineer ஆக பணிபுரிந்து வருகிறேன். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பன்னைக்கிணர் கிராமம் சர்வே எண்.267/2ல் 4 ஏக்கர் விவசாய நிலத்தை கோமங்கலத்தைச் சேர்ந்த சௌந்திரராஜன் என்பவரது மகன் விஜயசேகர் என்பவரிடமிருந்து 24.06.2020ம் தேதி கிரையம் வாங்கினேன். நான் வாங்கிய விவசாய நிலத்தில் உள்ள மின்சார இணைப்பு எண்.344002327 விஜயசேகர் பெயரில் இருந்தது. அந்த மின்சார இணைப்பை எனது பெயரில் மாற்றம் செய்வதற்காக கொங்கல்நகரத்தில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய செக்சன் அலுவலகத்திற்கு 12.08.2020ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சென்று திரு.சமுத்திரம் AE அவர்களை பார்த்து விவசாய மின் இணைப்பை எனது பெயரில் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்துடன் அந்த நிலத்தின் சிட்டா, அடங்கல், வரைபடம், போட்டோ-2, Indemnity Bond, கிரைய பத்திரத்தையும் இணைத்து கொடுத்தேன். அவர் என்னிடம் விண்ணப்பத்தை வாங்கி பார்த்து விட்டு எனது செல்போன் நம்பர் 9976770422 கேட்டு எனது விண்ணப்பத்தில் பென்சிலால் எழுதினார். அவர் என்னிடம் இரண்டு நாட்களில் பீல்டுக்கு இன்ஸ்பெக்சன் வருவதாக சொன்னார். அதன்பின்னர் நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். 14.08.2020 தேதி மாலை சுமார் 4 மணிக்கு திரு.சமுத்திரம் AE அவர்களை எனது பீல்டுக்கு வந்து பார்த்தார். அப்போது அவர் என்னிடம் திங்கட்கிழமை ஆபீசுக்கு வந்து பாருங்கள் பைலை ரெடி பண்ணி வைக்க சொல்கிறேன். நான் சரி என்று சொன்னேன். நான் 17.08.2020ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு

கொங்கல்நகரம் AE அலுவலகம் சென்று திரு.சமுத்திரம் AE அவர்களை பார்த்தேன். அந்த அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலரிடம் எனது பைலை ரெடி செய்து கொடுக்க சொன்னார். அந்த பெண் அலுவலர் நான் ஏற்கெனவே கொடுத்த விண்ணப்பத்துடன் அந்த அலுவலகத்தில் தயார் செய்து வைத்திருந்த பைலையும் சேர்த்து என்னிடம் கொடுத்து பொள்ளாச்சியில் உள்ள TANGEDCO செயற்பொறியாளர் அலுவலகத்தில் கொடுக்க சொன்னார். நான் அப்போது அந்த பெண் அலுவலரிடம் EE அலுவலகத்தில் யாரிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அவர் முதல் மாடியில் தர்மராஜ் என்பவரை பார்த்து கொடுக்க சொன்னார். அதன்பின்னர் சுமார் 11.30 மணியளவில் பொள்ளாச்சி EE அலுவலகம் சென்று திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர், Assistant Accounts என்பவரிடம் AE அலுவலகத்தில் கொடுத்த பைலை கொடுத்தேன். அவர் அந்த பைலை புரட்டி பார்த்து சரியாக உள்ளதா என்று கம்யூட்டரில் சரிபார்த்த பின்னர் அந்த பைலை என்னிடம் திருப்பி கொடுத்து தர்மராஜ் என்பவரிடம் கையெழுத்து வாங்கி வர சொன்னார். நான் அவர் சொன்ன தர்மராஜ் அவர்களிடம் கையெழுத்து வாங்கி மீண்டும் பைலை அவரிடம் கொடுத்தேன். திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் எனது பைலை பார்த்துவிட்டு அவர் எனது செல்போன் எண்ணை கேட்டார். நான் அவரிடம் விண்ணப்பத்தில் எனது செல்போன் எண்ணை கொங்கல்நகர் செக்சன் AE சார் எழுதிய விபரத்தை சொன்னேன். அவர் வருகிற புதன்கிழமைக்குள் கூப்பிடுவதாகவும், Demand Notice வாங்கும் போது கவனிக்கனும் என்று சொன்னார். நான் அவரிடம் அவரது செல்போன் எண்ணை கேட்ட போது அவர் அவரது போன் not reachable area-வில் இருக்கும் என்றும் அவரே கூப்பிடுவதாகவும் சொன்னார். 19.08.2020-ம் தேதி காலை சுமார் 12.00 மணிக்கு திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் அவரது செல்போன் எண் 8838422470 லிருந்து எனது செல்போன் எண்.9976770422க்கு அழைத்து name transfer செய்வதற்கான Demand Notice ரெடி பண்ணியிருக்கிறேன் என்றும் இன்றைக்கு அல்லது நாளைக்கு வந்து வாங்கி விடுங்கள் என்றும், பீஸ் மதியம் 2.30 மணிவரை தான் கட்ட முடியும். அதனால் நாளைக்கு வந்து எல்லா வேலைகளையும் முடித்து விடுங்கள் என்றும் கூறினார். அதன்பின்னர் நான் மதியம் சுமார் 12.15 மணிக்கு எனது செல்போன் எண்ணிலிருந்து அவரது செல்போன் எண்ணிற்கு அழைத்து இன்றைக்கே வந்து பார்த்து விடுகிறேன், எவ்வளவு நேரம் சார் இருப்பீர்கள் என்று கேட்டேன். மதிய உணவு இடைவேளைக்கு முன்னரோ பின்னரோ வாருங்கள் என்று

சொன்னார், அதனால் நான் மதியம் சுமார் 2.30 மணிக்கு பொள்ளாச்சி EE அலுவலகம் சென்று திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் எனது விண்ணப்பத்தை எடுத்து பார்த்துவிட்டு எனது விண்ணப்பத்தில் அவரது பென்சிலால் 3000 என எழுதி காண்பித்தார். நான் அவரிடம் அவ்வளவு எல்லாம் எண்கிட்ட இல்லைங்க சார், நானே ரொம்ப கஷ்டத்தில இருக்கிறேன் சார், நா இவ்வளவு எல்லாம் எதிர்பார்கலைங்க, 500/- ரூபா வரும் என்று நினைத்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ஆபீசர்ஸ கவனிக்கனும், ரூ.320/- பீஸ் கட்டிவிட்டு இங்க வரனும், இப்ப இருக்கிறத கொடுத்துட்டு போங்க, நீங்க அத, நீங்க வர டைம் பாத்திருங்க என்றும், 1500/- ரூபாய் கொடுத்துட்டு போங்க என்றும் சொன்னார். நான் அவரிடம் பாதி சம்பளம் தான் கொடுக்கிறாங்க, அத வைச்சுக்கிட்டு வீட்டு வாடகை கொடுக்கனும், எங்க கஷ்டத்தையும் புரிஞ்சிக்கோங்க என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நீங்க இருக்கிறத கொடுத்துட்டு போங்க, நீங்க அடுத்து நான் சொன்னதை டிரை பண்ணுங்க, 320/- ரூபாய் பீஸ் கட்டிவிட்டு வாருங்கள் என்று சொன்னார். அவர் வற்புறுத்தி கேட்டதால், விருப்பமில்லாமல் நான் வேறு வழியில்லாமல் ரூ.500/- அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் அவரது டேபிள் டிராயரை திறந்து பணத்தை போட சொன்னார். நான் அவர் சொன்னபடி பணம் ரூ.500/-ஐ டேபிள் டிராயரில் வைத்தேன். அப்போது அவர் Tamilnadu Electricity Generation and Distribution Corporation Limited Demand Notice 28811 LT Agreement Charges Rs.20/-, 61964 Name Transfer fees (61909c) Rs.300/- என்று Demand Notice எங்கிட்ட கொடுத்து கொங்கல்நகரம் AE அலுவலகத்தில் பீஸ் கட்ட சொன்னார். அதன்பின்னர் நான் கிளம்பிவிட்டேன். இன்று 20.08.2020 தேதி காலை சுமார் 09.45 மணிக்கு கொங்கல்நகரம் AE அலுவலகத்தில் ரூ.320/- பீஸ் கட்ட சென்ற போது AE அவர்கள் அலுவலகத்தில் இல்லை. எனவே நான் AE அலுவலகத்தில் வைக்கபட்டிருந்த அலுவலக போர்டில் இருந்த AE அவர்களின் செல்போன் எண்.9445851540-க்கு எனது செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் வெளியில் இருப்பதாகவும், அலுவலகத்தில் பைலை கொடுத்துவிடுங்கள் பீஸ் நாளைக்கு கட்டுங்கள் என்று சொன்னார். அவர் சொன்னபடி நான் அந்த அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலரிடம் ரூ.320/- கட்டுவதற்கான சிலிப் மற்றும் LT Agreement-யும் கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டேன். திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்கள் சொன்னதுபோல் எனது பெயரில் மாற்றம் செய்வதற்கான பீஸ் தொகையை கட்டிய பிறகு அவரிடம் கொடுக்க

செல்கிறேன். எனது நிலத்தின் விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து கொடுக்க என்னிடம் ஏற்கனவே 500/- ரூபாய் வற்புறுத்தி வாங்கிகொண்டார். மேலும் அவர் கேட்டது போல் அவருக்கு 1500/- லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது நிலத்திள் விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்காக என்னிடம் லஞ்சமாக ரூ.1500/-பணம் கேட்ட திரு.அகஸ்டின் கிறிஸ்டோபர், Assistant Accounts மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். நான் 19.08.2020 தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் நானும் திரு. அகஸ்டின் கிறிஸ்டோபர் அவர்களும் பொள்ளாச்சி EE அலுவலகத்தில் வைத்து பேசிய உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்து வைத்திருந்ததை CD-யில் போட்டு தங்களிடம் ஒப்படைக்கிறேன்.

இடம்: கோவை

நாள்: 20.08.2020

இப்படிக்கு,

K Ath
20/8/2020
(K. Amarnath)

Respected Madam, Received a Complaint on 20.08.2020 at 15.00hrs (Signature) 20.08.2020 (K. Sasilekha) Inspector of Police, V&AC, Coimbatore.

Respected Madam, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr no. 3/2020/AC/CB U/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 20.08.2020 at 17.00hrs (Signature) 20.08.2020

(K. Sasilekha)
Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Coimbatore.